மந்திரக்கோல் கொண்டு, நாடாள முடியுமா?

:0:

இப்போது வரும் அரசியல் ஏகாதிபத்தியத்தின் மறுபதிப்பே

மூக்கணாங் கயிறில்லாத மாடாக விரும்பும் சர்க்கார்!

:( ):

அக்பர் - அசோகன்கூட அடிவைக்கத் துணியா திராவிடம்

:(0):

விஷ்ணுவின் அவதாரங்களும் விந்தியத்துக்கப்பால்தான்!

(0)

அருப்புக்கோட்டையில் தோழர் அண்ணாத்துரை

"எந்த நாட்டிலும் ஆளுங்கட்சியினருக்கு எதிர்க்கட்சிகள் இருப்பது வழக்கம்; அது அவசியமுங்கூட. மூக்கணாங்கயிறு இல்லாத மாடு சாவியில்லாத வண்டி ஆகியவை ஆபத்தைத்தான் தரும். அதுபோலவே, எதிர்க் கட்சி யில்லாத ஆட்சியும் ஆபத்தையே விளைவிக்கும்.

"நாங்கள் சொல்லுவது ஆட்சியாளருக்குப் புரியவில்லை. மனிதன் துன்பச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கின்றான், ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள், 'சங்கிலியில் ஒரு வளையத்தை எடுத்து விட்டால் போதும், மனிதன் சுகமாக இருப்பான்' என்று. நாங்கள் சொல்லுகிறோம், 'சங்கிலியை அடியோடு அறுத்தெறியவேண்டும்' என்று. இதுதான் எங்களுக்கும் அவர்களுக்குமுள்ள பேதம்,

"அக்பர், அசோகன், கனிஷ்கர், விக்ரமாதித்தன் ஆகியோர்கள் வட இந்தியாவில் பெரிய பெரிய சாம்ராஜ்யங்களை ஸ்தாபித்தவர்கள். அக்பர் காலத்திலும் சரி, அசோகன் காலத்திலும் சரி அவர்களுடைய சாம்ராஜ்யங்கள் விந்திய மலைக்குத் தெற்கே தாண்டி வர முடியவில்லை. மகாவிஷ்ணுவின் 10 அவதாரங்களும் கூட விந்தியத்துக்கு அப்பால்தான். இங்கு ஒரு அவதாரங்கூட எடுக்க முடியவில்லை. வட இந்தியாவிலிருந்து புலிகேசி என்பவன் விந்திய மலையைக் கடந்து காஞ்சி மேல் படையெடுத்து வந்தான். அப்போது பல்லவன், பரஞ்சோதி என்கிற திராவிடனைத் தனது படைத் தலைவனாக்கி புலிகேசியை வடஇந்தியா வரை விரட்டித் தோற்கடித்தான். இப்படி இங்கிருந்தவர்தான் அங்குபோய் வென்றார்களே தவிர, அங்கிருந்தோர் ஒரு காலத்தும் நம்மை வென்றதும் கிடையாது; அடிமைப்படுத்தியதும் கிடையாது. இப்போதுதான் நாம் வட இந்திய சர்க்காரிடம் சிக்கிக்கொண்டு பணமில்லாமல் திண்டாடுகிறோம்" என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாத்துரையவர்கள் கடந்த 3ந் தேதியன்று அருப்புக்கோட்டை திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழாக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அருப்புக்கோட்டை, ஜன. 3—

இந்நகர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா மாலை 6 மணிக்கு தியாகராய வாலிபர் சங்க முன்பாக கோவில்பட்டி நகராண்மைக் கழகத் தலைவர், தோழர் ஈ. வெ. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

நகரின் பல பாகங்களிலும் விழாவை முன்னிட்டு கழகக் கொடிகள் உயர்த்தப்பட்டிருந்தன. மாலை 4 மணியிலிருந்தே மக்கள் திரள் திரளாகக் கூட ஆரம்பித்தனர். சுமார் 15000 மக்கள் தாய்மார்களும், பெரியோர்களும், பிற [illegible] தோழர்களுமாகக் கூடியிருந்த காட்சி [illegible] யாக இருந்தது. தோழர்கள், சோ. மு. சே[illegible] எம் இர[illegible] [illegible] இன்பம் பொட்டச் செட்டி நாட்டுப்பண் இசைத்தனர். தோழர் சி[illegible] முன்மொழிய தோழர் கே. இராமசாமி வழிமொழிய தோழர் ஈ. வெ. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமை பீடத்தில் அமர்ந்தார். தோழர் இராமசாமி யாவரையும் வரவேற்றுப் பேசினார்.

இராமநாதபுரம் மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்து வந்த கிளைக் கழகத் தோழர்கள், அண்ணாவுக்கும் தலைவர், வள்ளிமுத்துக்கும் மாவட்டத்தின் சார்பில் வரவேற்று மலர் மாலை சூட்டினர். அருப்புக்கோட்டை மறுமலர்ச்சிக் கழகத்தார் அண்ணாவுக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தனர். அருப்புக்கோட்டை சாலியர் பிரசார [illegible] தியாகராய வாலிபர் சங்கத்தினரும் அண்ணாவை வரவேற்று மாலை சூட்டினர். பொருத்த ஆரவாரத்துக்கிடையே தலைவர் வள்ளிமுத்து அவர்கள் பேசியதாவது:—

தோழர்களே! தாய்மார்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

Phone No. 4502

விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458

[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (9—1—50) வெளியூர் (10—1—50) [இதழ் 138

குடும்பத்தினர் கூடிப் பேசுவதேயாம் காமன்வெல்த் மாநாடு!

'காஷ்மீர்' போன்ற தகராறு பிரச்னைகள் வாராவாம்!

இலங்கை இந்தியர் நிலை என்ன?

கொழும்பு, ஜன. 8—

"இங்கு நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில், வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற ரீதியில் முடிவு எதையும் எதிர்பார்க்க முடியாது பல விஷயங்களைக் குறித்து காமன்வெல்த் நாடுகள் ஒவ்வொன்றும் என்ன சொல்ல இஷ்டப்படுகிறதோ அவைகளைத் தெரிவிக்கும். இது ஒரு குடும்பத்தினர் கூடி ஆலோசிப்பதைப் போன்றது" என்று இலங்கைப் பிரதமரும் காமன்வெல்த் மாநாட்டின் தலைவருமான தோழர் சேனநாயகா, நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஸ்டர்லிங் கடன்கள் பற்றிய பேச்சு வார்த்தையும் நடக்கும் என்றும், ஆனால் எவ்வித முடிவும் செய்யப்படமாட்டாதென்றும் அவர் கூறினார் அஜெண்டாவைத் தயாரிக்க பூர்வாங்க கூட்டம் ஒன்று நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

தகராறிலுள்ள விஷயங்களான காஷ்மீர் பிரச்னை, தென்னாப்பிரிக்க இந்தியர்கள் பிரச்னை முதலியவைகள் விவாதத்திற்கு வருமா என்று கேட்டதற்கு சேனநாயகா பதிலளிக்கையில், ஒரு குடும்பம் என்றால் எவ்வளவோ சண்டை சச்சரவுகள் இருக்கும் என்றும் ஆனால் அவை சம்பந்தப்பட்ட நாடுகளிடையே பேசப்படுமே ஒழிய பொது விவாதத்திற்கு வராது என்று கூறினார்.

கம்யூனிஸ்டு ஆபத்தைத் தடுக்க வேண்டிய விஷயம் பற்றி பேசப்படுகையில், ஜப்பான் சமாதான உடன்படிக்கையும் ஆலோசிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்

நினைவூட்டுகிறோம்

15—1—50ல் நடைபெறவிருந்த சென்னை மாவட்ட தி. மு. கழக மாநாடு 22—1—50-ம் தேதிக்கு ஒத்தி போடப்பட்டுள்ளது என்பதை தோழர்கள் கவனிக்கவும். முழு விவரங்களை விளம்பரத்தில் காண்க.

பிரிட்டனில் இந்திய ஜவுளி விற்க இந்தியா ஏற்பாடு

'மகேஸ்வரி லாட்ஜ்' என்கிற பம்பாய் கம்பெனியைச் சேர்ந்த தோழர் வி. எல். மகேஸ்வரி என்பவர் மாஞ்செஸ்டர் வந்து சேர்ந்து 2000000 இந்திய ஜவுளிக்கு 'ஆர்டர்' கொடுத்திருக்கிறார். லங்காஷயரிலிருந்து தேவையான ஜவுளிகள் தக்க சமயத்தில் கிடைக்காததால் இந்திய ஜவுளி வாங்க பிரிட்டிஷ் மக்கள் தயாராக இருக்கின்றனர். சென்ற ஆண்டு பிரிட்டன் வரவழைத்த இந்திய ஜவுளி [illegible]

செஞ்சீனாவுக்கு பிரிட்டன் அங்கீகாரம்

(0)

உறவு முறை தன்மை என்ன?

லண்டன், ஜன. 8 —

கம்யூனிஸ்டு சீனாவை பிரிட்டன் அங்கீகரித்ததால் ஆசிய நிலைமை எவ்வளவு தூரம் பாதிக்கப்படும் என்பதைப் பற்றி பிப்ரவரி தெரிய [illegible] மிகவும் விழிப்புடன் இருக்கிறார்கள்

அங்கீகரிக்கப்பட்ட பின்பு மாசேதுங் சர்க்காருடன் வேறு விஷயங்களில் எந்தவித உறவைக் கொண்டிருப்பது என்ற விஷயம் கொழும்பு மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

இவ்விஷயமாக 'மாஞ்செஸ்டர் கார்டியன்' எழுதியிருப்பதாவது:

மாசேதுங் சர்க்காரை பிரிட்டன் அங்கீகரித்து விட்டதால் சீனக் கம்யூனிஸ்டுகளை நண்பர்களாக ஏற்றுக் கொண்டுவிட்டதாக அர்த்தமில்லை. மேற்கொண்டு உறவு விஷயம் மாசேதுங் மேற்கொண்டு ஆதரிப்பில் இருக்கிறது என்பதைப் பொருத்ததாகும்.

இதேபோல் பர்மாவில் கம்யூனிஸ்டுகள் தங்கள் [illegible] காட்டினால் அதை காமன்வெல்த் நாடுகள் எப்படிக் கருதும் என்பதை நிர்ணயிக்க அறிய ஆவலாக இருக்கிறது. சீன கம்யூனிஸ்டுகள் மேலும் ஆரம்பிப்பில் இருந்தால் நிலைமை மிகவும் சௌஜன்யமாகவே இருக்கும்.

சீனாவில் [illegible] எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம் [illegible] இருந்தால் அவர் மேற்கொண்டு போரில் ஈடுபட மாட்டார். கம்யூனிஸ்டுகள் பிரிட்டனுடன் [illegible] ஸ்டர்லிங் [illegible] வர்த்தகத்தை ஏற்படுத்திக்கொள்ளவும் ஆவலாக இருக்கிறது.

மலேயாவில் கம்யூனிஸ்டு போர் திட்டம்

துண்டுப் பிரசுரம் வெளியிடும் தகவல்

சிங்கப்பூர், ஜன. 8—

மலேயா கம்யூனிஸ்டு கட்சியினர் சென்ற நவம்பரில் தயாரித்த துண்டுப் பிரசுரத்தை பாதுகாப்பு அதிகாரிகள் இப்பொழுது வெளியிட்டிருக்கின்றனர், அதில் கூறப்பட்டிருப்பதாவது:—"நம் படைகள் தளமாகக்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க ஒரு பிரதேசம் முதலில் விடுவிக்கப்பட வேண்டும் மலேயாவில் எப்பொழுதும் குழப்பமும் அமைதியின்மையும் ஏற்படும் படி நாம் செய்ய வேண்டும்.

வேலையிலிருந்து நீக்கப்படும் தொழிலாளர்கள் கமிட்டிகளுக்குச் சென்று, கலகப் படையினரை பலப்படுத்த உழைக்க வேண்டும்

பிரிட்டன் பீகிங் சர்க்காரை ஆதரித்ததைப் [illegible] நாட்டு [illegible] இரண்டு பக்கங்கள் அலங்கரிக்கப்பட்டு சிங்கப்பூர் முக்கிய [illegible] களில் சென்றன. இதைத்தவிர வேறு ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இல்லை.

மாலை மணி

சென்னை 9—1—50 திங்கட்கிழமை

அன்புதான்; ஆத்திரமல்ல!

'இந்து — முஸ்லிம்' என்ற இருசொற்களுக்கும் இடையே இருக்கும் சிறுகோடு, ஒற்றுமையின் உருவமாக நிற்கவில்லை-நிற்க முடியவில்லை. பிளவு படுத்திக் காட்டும் பேதத்தின் பெரும் சின்னமாகவே சென்ற பல ஆண்டுகளாகவும் இருந்து வந்தது, இப்பொழுது இருந்து வருகிறது என்பதை யாவரும் நன்கு உணர்வர்.

இந்து-முஸ்லிம் இரு பக்கங்களிலிருந்தும் எழுந்த மாற்சரியம் அந்தச் சிறுகோட்டைப் பிணக்காக்கிப்; பிணக்கைப் பூசலாக்கிப், பூசலைக் குருதி கொட்டச்செய்யும் கிளர்ச்சிப் புயலாக்கி நாட்டிலே நாச விளைவு உண்டான பிறகு ஒரு முடிவு ஏற்பட்டது; அதுதான் இந்தியா-பாக்கிஸ்தான் பிரிவினை. இந்து—முஸ்லிம்கள் வெட்டிமடிகிற அளவுக்குக் குரோதத்தையும், தீயநிலைமையையும் உண்டாக்கியவர்களில் 'முதல் சிறப்பிடம்' பெற்றவர்கள் இந்துமகாசபைக்காரர்கள்; அவர்களது உள்ளத்தில் குடிபுகுந்திருந்த இந்துமத உணர்வு முஸ்லிம்களைத் தோழமைக் கொள்ளச்செய்யவில்லை; மாறாக மனக்கசப்பையே வளர்த்து வந்தது. இந்து மதத்தலைவர் விதைத்த விதையை அவர்களே அறுவடை செய்து கொள்ளவும் நேர்ந்தது. காங்கிரஸ் இந்துத்தலைவர்கள் பாக்கிஸ்தான் பிரிவினைக்கு ஒத்துக் கொண்டார்கள் என்றால், திருப்தியோடு அல்ல; வேறு மார்க்கமில்லை என்ற காரணத்தால் விதைத்த விதையினால் உண்டான-பலனை அறுவடை செய்வதல்லாமல் வேறுவழியே இல்லை என்ற நிலை ஏற்பட்ட போதுதான், காந்தியார், நேரு, பட்டேல், ஆஜாத், பிரஸாத் ஆகியவர்களின் கண்ணெதிரிலேயே பாக்கிஸ்தான் பிரிந்தது. இந்த நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகுதான் ஓரளவுக்காவது இந்தியத்துணைக்கண்ட அரசியலில் உள்நாட்டு அமைதிநிலவ வழி ஏற்பட்டது.

இவ்வளவெல்லாம் நடந்த பிறகு—அவற்றை நேரிலே கண்டபிறகு, அகில பாரத இந்து மகாசபைத் தலைவர் தோழர் டாக்டர் என். பி. கரே, இந்தியா-பாக்கிஸ்தான்- மீண்டும் இணைய வேண்டும் என்று கூறுகிறாரென்றால், 'என்ன பொருள். நெருக்கடி-கிளர்ச்சி-பூசல்-உள்நாட்டுப்போர் ஆகியவற்றை மீண்டும் வரச் சொல்கிறார் என்றுதானே பொருள். அப்படி ஏற்படும் குழப்பநிலையில், இந்துக்களின் கதி என்ன ஆகிறது என்பதைப்பற்றிக்கூட கவலையில்லை, முஸ்லிம்கள் இலட்சக்கணக்கில் இரத்த வெள்ளத்தில் மிதக்கிறார்களா என்பதைக் காணவேண்டுமென்பதே அவரது பேரவா போலும் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

குழப்பநிலை தீரும் மருந்தாகக் கொள்ளப்பட்ட பிரிவினையை அழித்துவிட்டால், மீண்டும் குழப்பநிலை ஏற்படும் என்ற அச்ச உணர்வு தோன்றிய காரணத்தால்தான், நாகபுரியில் பேசிய பண்டித நேருவும், பம்பாயில் பேசிய சர்தார் பட்டேலும், டாக்டர் கரேயின் கூற்றைக் கண்டித்தொதுக்கியுள்ளனர். அப்படிக் கூறுவதால் தோழர்கள் நேரும், படேலும். 'பாக்கிஸ்தான்' என்பது உரிமை வேட்கையின் உண்மை உருவம், என்று ஒப்புக் கொண்டுவிட்டார்கள் என்பதல்ல; உள்நாட்டு ஆட்சி முறையைப் பாதிக்கும் குழப்பநிலையைத் தவிர்க்க எண்ணுகிறார்கள் என்பதேயாகும். பண்டிதர்—பட்டேல் ஆகியவர்களின் பேச்சுகளை ஆய்ந்து பார்த்தால் பாக்கிஸ்தான் மீது எவ்வளவு ஆத்திரக கனலைக் கக்கியிருக்கிறார்கள் என்பது எளிதில் விளங்கும். இப்பொழுதே பொருளாதாரப் போர் தொடுத்திருப்பதாகவும், அது சமந்தமாகப் பிரயோகிக்கக் கூடிய பலமுள்ள ஆயுதங்கள் கையில் வைத்திருப்பதாகவும், அவற்றைப் பிரயோகிக்க இப்பொழுது எண்ணமில்லை என்றும் பட்டேல் கூறியிருக்கிறார். இந்தியா நினைத்தால் பாக்கிஸ்தானை, பொருளாதார நெருக்கடியில் வைத்து சிக்கிச் சீரழிக்கமுடியும் என்னும் கருத்தினை, பண்டித நேருவின் நாகபுரி பேச்சு ஒருவாறு தெளிவு படுத்துகிறது. இந்தக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டுதான், பண்டிதர்-பட்டேல் பேச்சுக்களுக்குப் பதில் சொல்லும் முறையில் டாக்டர் கரே கூறுகிறார் "இந்தியா-பாக்கிஸ்தானை ஒன்றாக இணைக்க வேண்டும் என்பதில் இந்து மகா சபைக் கொள்கைக்கும், நாகபுரியிலும், பம்பாயிலும் முறையே பேசிய பண்டிதர்-பட்டேல் பேச்சுக்களுக்கும் முரண்பாடு எதும் கிடையாது" என்று. இவர்கள் மூவர் கூற்றுக்களையும் ஒன்றாக வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும் போது நேருவும் பட்டேலும் ஆட்சிப்பீடத்திலிருப்பதால் அப்படிக் கூறுகிறார்கள், டாக்டர் கரே அப்பால் இருப்பதால் கொஞ்சம் அளவுக்கு மீறி பேசுகிறார் என்பது ஒருவாறு தெளியப்படும்.

எப்படியோ அரசியல் சூழ்நிலை வேறுவகையற்ற முறையில், பாக்கிஸ்தானை உருக் கொள்ளச்செய்துவிட்டது. நாடு பிரிவினை பெற்ற காலத்தில் இரு நாட்டினரும், தங்களுக்கிடையே அடுத்து அன்புதான் தவழும் என்ற கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர் இன்று இருசாராரும் ஆத்திரக் கனலைப் பரிமாறிக்கொள்கிறார்கள். அது இருவர்க்கும் நல்லதல்ல. இந்தியா-பாக்கிஸ்தான் தகராறுகள் தீர அறிவுடம்பட்ட **அன்பு வழிதான்** ஏற்றதாகுமேயொழிய ஆணவ வழிப்பட்ட **ஆத்திரமல்ல!**

மேலும் மேலும் இந்தியத் துணைக்கண்டத்தின் திக்குத்திக்கு குழப்பமும், கிளர்ச்சியும் ஏற்படாமல் இருக்க வேண்டுமாயின், வர்க்கத்திற்கொரு வட்டாரமாக பிரித்துத் தந்து, அவைகள் தம் விருப்பம்போல் வாழ வழி செய்வதே யாகும். அப்படிக்கில்லாமல், ஆணவத்தையும் ஆத்திரத்தையும் நம்பி நீண்ட நாட்களுக்கு உரிமை வேட்கைக் கிளர்ச்சிகளைத் தடைபடுத்திவிட முடியாது. என்றாவது ஒருநாள் குமுறும் எரிமலை வெடித்தே தீரும். ஆகவே எரிமலை குமறுமுன் முன்னேற்பாடு செய்து கொள்ளுதல் நலம்; ஆகவே இந்தியத் துணைக்கண்டத்தின் முன்னேக்கிய பிரச்சினைகளைத் தவிர்க்க ஆத்திர வழியைக் கடைப்பிடிக்காமல், அன்பு நிலைபட்ட அறிவுடைமை வழி இந்துத் தலைவர்களும், காங்கிரஸ் தலைவர்களுக் காரியமாற்றுவார்களாக!

அறிவுக் கதிர்!

தாங்கள் மேலானவர்கள் என்ற கர்வத்தால் ஆரியர்கள், இந்தியாவில் வசித்த மற்ற ஜாதியாருடன் கலந்து கொள்ளவில்லை. ஆரியர்கள் மற்ற ஜாதியாரோடு கலக்காமல் இருப்பதற்காகப் பல சட்டங்களையும் விதிவிலக்குகளையும் ஏற்படுத்தினார்கள். வெகு காலத்திற்குப் பின்பு இதன் காரணமாக வர்ணபேதங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் உள்ள ஜாதி' வகுப்புகள் இதனால் உண்டானவைகளே.

—பண்டிதநேரு

செஞ்சீனவுக்கு மூலப்பொருள்கள்

செஞ்சீனவுக்கு, ஏராளமான மூலப்பொருள்கள் இங்கிருந்து அனுப்பப்பட்டு வருகின்றன. சீன கம்யூனிஸ்டு சர்க்கார் ஏதாவது தடை விதித்தால் ஒழிய, இந்த வர்த்தகம் தொடர்ந்து நடை பெற்று வரும் என்று தெரிகிறது.

சென்னைக்கு கனேடிய எஞ்சின்கள்

இந்தியாவில் உபயோகப்படுவதற்கென 10 எஞ்சின்கள் கனடாவிலிருந்து ஜனவரி 4ந் தேதியன்று பீட்டர்தால் என்ற பிரிட்டிஷ் கப்பலில் சென்னைத் துறைமுகம் வந்தடைந்தது. ஒவ்வொரு எஞ்சினுடையவும் எடை 92 டன் என்று கூறப்படுகிறது. மார்ச் மாதத்தில் மேலும் 36 எஞ்சின்கள்வருமென்று தெரிகிறது.

பாஸ்பேட் எருக்கள்

தீவிரச் சாகுபடி திட்டத்தின் கீழ் சென்னை மாகாணத்தில் சகாய விலையில் பாஸ்பேட் எருக்கள் விநியோகித்து வந்த திட்டத்தை மீண்டும் அமுல் நடத்த சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

சர்க்கார் ஊழியர்களுக்கு வேலை நிறுத்தம் செய்ய உரிமை இல்லையாம்!

—(0)—

அமைச்சர் காட்கிலின் அர்த்தமற்ற வாதம்!

“நியாயமான கூலி கேட்கத் தொழிலாளருக்கு உரிமை உண்டு. ஆனால் தாங்கள் வாங்கும் கூலிக்கேற்ப பூரணமாக உழைப்பது அவர்களுடைய பொறுப்பு. பொதுமக்களிடம் சர்க்கார் ஊழியர்களுக்கு விசேஷ பொறுப்பு உண்டு. நாட்டின் பாதுகாப்பிற்கும் அவசியமான சர்க்கார் வேலைகள் அவர்களை நம்பித்தான் இருக்கின்றன.

தனிப்பட்ட ஸ்தாபனங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்குச் சில சந்தர்ப்பங்களில் வேலை செய்யும் உரிமை இருக்கலாம்-இருக்கவும் கூடாது. லாபத்திற்காக சர்க்கார் நடத்தப்படவில்லை. ஆகையால் சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வது சம்பந்தமான பிரச்னை எதுவும் செல்லாது”

என்று நாசிக்கில் நடந்த தொழிலாளர் கூட்டமொன்றில், இந்திய சர்க்கார் அமைச்சர் தோழர் என். வி. காட்கில் பேசியிருக்கிறார்.

அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்பது தோழர் காட்கிலின் வாதம். இதற்கு அவர் கூறும் முக்கியமான காரணம் சர்க்கார் லாபத்திற்காக நடத்தப்படவில்லை; ஆகையால் சர்க்கார் ஊழியரும் வேலை நிறுத்தம் செய்வது சரியல்ல என்பதாகும்.

ரொம்ப சரி. தோழர் காட்கிலின் வாதப்படியே பார்ப்போம். லாபத்துக்காக சர்க்கார் நடத்தப்படவில்லை என்பதற்காக சர்க்கார் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்பது எந்த நீதியில் அடங்கும் என்று கேட்கிறோம். வேலை நிறுத்தம் என்பது வேதனையின் அறிகுறி. சர்க்கார் ஊழியராக இருப்பினும் வேறு எந்த ஊழியராக இருப்பினும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற வருவாய் இல்லாவிட்டால் அத்தகைய ஊழியர்கள் உள்ளத்தில் வேதனை எழத்தான் செய்யும். அப்படி வேதனை எழுகின்ற வேளையில் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யாமல் எப்படி வாளாவிருப்பர்?

எனவே, வேலை நிறுத்தம் இன்னார் செய்யலாம் இன்னார் செய்யக்கூடாது என்று அமைச்சர் கூறுவது அறிவுடைமையாகாது. சர்க்கார் லாபத்துக்காக நடத்தப்படவில்லை என்பது உண்மையே. தோழர் காட்கில் நாட்டும் அதே உண்மையைக் காட்டியே நாம் கேட்கிறோம். லாபத்தை எதிர்பார்க்காத ஸ்தாபனத்தில் தொழிலாளருக்கு ஏன் குறைந்த ஊதியம் இருக்க வேண்டும் என்று. ஊழியருக்கு உற்சாகம் இருந்தால்தானே அவர்கள் செய்யும் ஊழியம் சிறப்புறும்? ஆகவே, எவ்வகையில் பார்க்கினும் அமைச்சர் காட்கிலின் வாதம் அர்த்தமற்றதே!

வைத்திய துறையில் சென்ற 50 ஆண்டுகளாக கண்டு பிடிக்கப்பட்ட புது விஷயங்களை எல்லாம் தொகுத்து ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

கம்யூனிசத்தை எதிர்த்து நடவடிக்கைகள்

லண்டன், ஜன. 8—

கொழும்பு காமன்வெல்த் மாநாடும், பாங்காக் யு. எஸ். கீழ்க் கோடி ராஜதந்திரிகள் மாநாடும் முடிந்த பிறகு ஒரு கீழைக் கோடி பிரதேச மாநாடு கூட்டப்பட்டு கம்யூனிஸம் பரவுவதைத் தடுப்பது பற்றி ஆலோசிக்கப்படலாம் என்று யார்க் ஷயர்போஸ்ட் பத்திரிகை கூறுகிறது.

இவ்விஷயமாக பிரிட்டனும் யுனைடெட் ஸ்டேட்ஸும் கலந்து பேசும் என்று அப்பத்திரிகை கூறுகிறது.

பாலைவனங்களைப் பண்படுத்தும் திட்டம்

லண்டன், ஜன. 8—

பாலைவனத்தைப் பண்படுத்தி செழிப்பாக்க 'யூனெஸ்கோ' கொண்டுள்ள திட்டம் விஷயமாக பூர்வாங்க பரிசோதனைகளை நடத்த அந்த ஸ்தாபனத்தின் சார்பாக ரிட்சி கால்டர் வட ஆப்பிரிக்கா, இராக், எகிப்து பாலைவன பிரதேசங்களுக்குச் செல்ல லண்டனை விட்டுப்புறப்பட்டிருக்கிறார்.

(ருனோப்)

கௌரவ நீதிபதிகள் பற்றி சட்டசபையில் கேள்விகள்

'கௌரவ நீதிபதிகள் நற்பணி ஆற்றி வருகின்றனர். எனவே அவர்களை எடுத்துவிடும் எண்ணமே இல்லை' என்று சட்டமந்திரி தோழர் மாதவமேனன் ஜனவரி 5ந் தேதியன்று சட்டசபையில் கேள்வியொன்றுக்குப் பதில் கூறுகையில் குறிப்பிட்டார்.

தகுதி திறமை பேரிலேயோ ஆற்றல் பேரிலேயோ கௌரவ நீதிபதிகள் நியமிக்கப்பெறுவதில்லையென்றும் அலுவல் கட்சித்தொடர்பு கொண்டிருப்போரே தேர்ந்தெடுக்கப்படுகின்றனரென்றும் உண்மைதானா வென தோழர் [illegible] கேட்டதற்கு அது உண்மையேயல்லவென மந்திரி குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்டு ஸ்தாபனங்கள்மீது மேற்கு வங்கசர்க்கார் பாய்ச்சல்

மேற்கு வங்க மாகாணத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்டு ஆதிக்கமுடைய மாணவ தொழிலாளர் ஸ்தாபனங்கள் ஏழு மாகாண சர்க்காரால் சட்ட விரோதமாக்கப்பட்டிருக்கின்றன. இந்தியச் சர்க்கார் சட்டதிருத்த ஆக்ட் 15-வது பிரிவின் கீழ் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ஸ்தாபனங்களை அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் முறையில் நடந்து கொண்டனவென்று சர்க்கார் கூறுகின்றனர்.

நாஜி ஜெனரல் மனைவிக்குப் பிரஜா உரிமை பறிமுதல்

மூனிச், ஜன. 6—

முதல் உலகப் போரில் ச[illegible]ட்டிருந்த ஜெர்மன் ஜெனரலின் மனைவி ப்ரா மாடில்டு லூடென்டார்ப் என்ற 72 வயது மாது நாஜி குற்றவாளி என்று கருதப்பட்டு, அவர்பிரஜா உரிமை பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.

அவர் எதுவும் எழுதக் கூடாது, எங்கேயும் பேசக் கூடாதென்று தடையுத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

10 1-50

பொத்தனூர்.—	(காலை)	சி. என். அண்ணாதுரை, ஏ. சித்தையன், பி பழனிச்சாமி.
வாசுதேவநல்லூர்:—		இரா. சு. தங்கப்பழம், எம் எஸ். சிவசாமி.

11-1-50

குளித்தலை:—	சி என். அண்ணாத்துரை.
திருவள்ளூர்:—	டி. சண்முகம், சத்தியவாணி முத்து, சி. பி. சிற்றரசு,
கடையநல்லூர்:—	இரா. சு. தங்கப் பழம் எம், எஸ். சிவசமி, ஆ. திராவிட மணி.

மந்திரக்கோல் கொண்டு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களே!! பெரியாரின் பொருந்தா மணத்தினால் கருத்து வேற்றுமை கொண்ட நங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்துக்கொண்டிருக்கிறோம். எந்தக் கொள்கைகளுக்காகப் பெரியார் பாடுபட்டாரோ, அந்தக்கொள்கைகளையே மாற்றும்படியான திருமணத்தைப் பெரியார் செய்து கொண்டார். அதைப் பற்றிய எல்லா விவரங்களையும் நீங்கள் ஏற்கனவே, பத்திரிகை வாயிலாகவும்' வேறு பல தோழர்கள் வாயிலாகவும அறிந்திருப்பீர்கள். ஆகையால் இப்போது நான் அதைப்பற்றி விவரிக்க விரும்பவில்லை. மொத்தத்தில் பெரியாரின் பொருந்தா மணமே திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறுதம" என்றார்.

ஆதிநாராயணன்

பின்னர், கொடியேற்ற எழுந்த இராஜபாளையம தோழர் ஆதிநாராயணன் பேசியதாவது :-

சில நாட்களுக்கு முன்னால் திராவிட கழகம் என்ற பேரால் உங்கள் மத்தியில் இருந்த நாங்கள் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரால் கூடியிருக்கிறோம். இதற்குரிய காரணங்களெல்லாம் நீங்கள் அறிந்ததே. திராவிட கழகத்திற்கும் திராவிட முன்னேற்ற கழகத்திற்கும் அதிக வித்தியாசமில்லை. கழகத்தின் பெயரிலே கொஞ்சம் வித்தியாசமும், கொடியின் அமைப்பு முறையில் கொஞ்சம் வித்தியாசமும் இருப்பது தவிர வேறொன்றுமில்லை. ஆகையால் கொடியின் கருத்தைப் பற்றியும் விளக்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விடுகிறது" என்று கூறிக் கொடியேற்றினார்.

காஞ்சி. கலியாணசுந்தரம்

அடுத்துப் பேசிய காஞ்சி. கலியாணசுந்தரம் குறிப்பிட்டதாவது :—

தோழர்களே !

நமது நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சுதந்திரம் கிடைத்த பின், நாம் கண்ட பலன் என்ன ? வட இந்தியா செல்வத்தில் கொழுத்து வருகிறது ! சர்வதேசக் கண்கொண்ட பண்டித ஜவகர்லால் நேரு, அமெரிக்க மூலதனத்தில் தொழில் நடத்தவும ஐரோப்பியமுதலாளிகளுக்குத் துணை செய்யவும் இருக்கிறார்.

நமது நாட்டைப் பற்றி அவருக்குக் கவலை ஏது ! இலங்கை, மலேயா, பர்மா, ஆப்பிரிக்கா முதலிய இடங்களில வாழும் தமிழர்களைப் பற்றி அவர் என்றைக்காவது கவலைப்பட்டது உண்டா ? காரணம் என்ன ? அவர் வேறு இனத்தைச்சேர்ந்தவர் நாம் வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள். அவருடைய கலாசாரம் வேறு. நம்முடைய கலாசாரம் வேறு. நம்மைப் பற்றி அவருக்கேன கவலை ?

திறமையற்ற சர்க்கார் !

இப்போது ஆளுகின்ற சர்க்காரைப் பற்றி நமது காங்கிரஸ் தோழர்கள் சிலர் புகழ்கிறார்கள் உண்மை உணராத காரணத்தினால்.

தற்போது எங்கும் சர்க்கரை கிடைக்கவில்லை. ஏன்? சர்க்கரை ஆலைகள் பூராவும் மூடிவிட்டார்களா? கரும்பு விளையவில்லையா? அப்படி ஒன்றும் நடந்துவிடவில்லை. பின் ஏன் சர்க்கரைக் கிடைக்கவில்லை? ஆச்சரிய கிருபளானி சொன்னார், சர்க்கரை கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம், சர்க்காரின் திறமைக் குறைவதன் என்று! இந்த ஒரு காரணத்திற்காகவே சர்க்கார் ஆட்சிபீடத்தை விட்டு வெளியேறிவிடலாம்' என்றும்! ஆச்சரிய கிருபளானி என்ன, ஒன்றும் தெரியாதவரா? நமது சுதந்திர சர்க்கார், சர்க்கரைக்கு விதிக்கும் கண்ட்ரோல் விலை ரூ 1-5-0 நமக்கு விற்கப்படுவதில்லை என்ன? ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் அதிகம் கொடுத்தால் வேண்டும்! இனி, துணியை எடுத்துச் கொள்வோம். இங்கே 5 லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. உற்பத்தியான துணிகள் விற்கமுடியாமல் தேங்கி கிடக்கின்றன. வட இந்திய சர்க்கார், துணி உற்பத்தியைப் பெருக்குங்கள் ! பெருக்குங்கள் ! என்று கூச்சலிடுகிறது. துணியின சங்கதி இப்படி இருக்கிறது. உணவைப் பற்றி கேட்கவேவேண்டாம்! இப்போது சர்க்கார் தான் உணவு வியாபாரம் செய்கிறது. என்றாலும் மக்களுக்கு உணவு சரியாகக் கிடைக்கவில்லை. மத்திய சர்க்கார் உணவு மந்திரி தோழர் ஜெயராம்தாஸ் தௌலத்ராம் என்பவரிடம், ஏனையா உணவு கிடைக்கவில்லை? என்றால், அவர் பருத்த தொந்தியுடன் எழுந்து நின்று கொண்டு, இது, நம்முடைய ஆட்சி. நாங்கள்தான் ஆள்கிறோம். ஆனதால் பொறுத்துக்கொள்ளுங்கள் என்கிறார்! இவர்களுடைய திறமைக்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும் ?

காமராஜர் நல்ல மனிதர் !

நமது காமராஜர் இருக்கிறாரே, அவர் நலல மனிதன் பாருங்கள் அவர், எங்கே போனாலும் உற்பத்தியைப் பெருக்குங்கள்! உற்பத்தியைப் பெருக்குங்கள்! ! என்று சொல்லாமல் இருப்பதில்லை எப்படி உற்பத்தியைப் பெருக்குவது? இங்கே உற்பத்தி பெருக என்ன வசதி இருக்கிறது? இங்கே தொழில் முறையில மாறுதலும், வளர்ச்சியும ஏற்படாததால்தானே, திராவிடன் வெளிநாடுகளுக்குச் செல்கிறான் பிழைப்புக்காக!

காமராஜர் சொல்லுகிறாரே "உற்பத்தியைப் பெருக்குங்கள்" என்று ஒரு உழவன் வருகிறான் காமராஜரிடம். ஐயா! 'எனக்கு நன்றாக உழவுத் தொழில் தெரியும். ஆனால், நிலமும் மாடும்தான் இல்லை. என்றால் காமராஜர் தருவாரா? இவைகள்போல ஏராளமான குறைகள் இருக்கின்றன. இந்த ஆட்சியில் என்று சுமார் ஒருமணி நேரம் பேசி முடித்தார்.

அண்ணாத்துரை

இறுதியாக பெருத்த கைத்தட்டலுக்கிடையே, தோழர் அண்ணாத்துரை பேசியதாவது.—

தோழர்களே! தாய்மார்களே!! தற்போதுள்ள நாட்டின் நிலைமை பற்றி, எனக்கு முன்னால் பேசிய தோழர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆளுங்கட்சியினருக்கு நாங்கள் கூறும் குறைபாடுகள் கசப்பாகவே இருக்கும் மிகுந்த சிரமப்பட்டுப் பணம் செலவிட்டு கிணறு தோண்டிக் கொண்டிருக்கும் ஒருவனை மற்றொருவன் பார்த்து அப்பா! இந்த இடத்தில் கிணறு தோண்டாதே! நல்ல நீர்கிடைக்காது என்று தடுக்க அதைக் கேளாமல் கிணற்றைத் தோண்டியவனிடம் போய், என்னப்பா! நான் சொல்லச் சொல்ல இவ்விடத்தில் கிணறு தோண்டினாயே! இப்போது பார்த்தாயா கிணற்று நீர் உப்பு நீர் ஆக இருப்பதை என்றால், சிரமப்பட்டுக் கிணறு தோண்டியவனுக்குக் கோபம்தானே வரும்!

அதுபோலவே, காங்கிரஸ் தோழர்கள் அருப்பாடுபட்டுக் கொண்டு வந்த சுதந்திரம் கஷ்டமும் சரித்திரமும் நிரம்பியதாக இருக்கிறதேஎன்றால், அவர்களுக்குக் கோபம் வரத்தானே செய்யும்! ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினரோ, திராவிட கழகத்தினரோ, மற்றவர்களோ, ஆளுங் கட்சியினரைக் குறை சொன்னால் "அவர்கள் கூறுவதும் நன்மைக்குத் தான்" என்று பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் எந்த நாட்டிலும் ஆளுங் கட்சியினருக்கு எதிர்க் கட்சிகள் இருப்பது வழக்கம். அது அவசியமுங்கூட. மூக்கணாங் கயிறு இல்லாத மாடு, சாவியில்லாத வண்டி, ஆகியவைகள் ஆபத்தைத் தரும். அதுபோலவே. எதிர்க்கட்சியில்லாத ஆட்சியும் ஆபத்தாகும்.

வெள்ளையன் ஆட்சியில்...!

அன்று வெள்ளைக்காரன் ஆட்சி செய்தபோது, ஆட்சியில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்ல காங்கிரஸ் கட்சி இல்லையானால், என்ன ஆகி இருக்கும்? நாடு பெரிதும் சீர்கெட்டு இருக்கும். 'வெள்ளைக்காரன் ஆட்சியில் நாம் ஏன் குறை சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்" என்று, காங்கிரஸ் காரர்கள் சும்மா இருந்தார்களேயானால், இன்று இந்த நாட்டை, இந்த நிலைமையிற் கூடக் காணமுடியாது. அதுபோலவே, எதிர்க்கட்சியினர்கள் ஆட்சி செய்வோரின் போக்கை எடுத்துக்காட்டி, குறைகளைக் கண்டிக்கத்தான் செய்வார்கள். "யார் ஆண்டாலென்ன" என்றிருந்தால் கஷ்டம் ஏற்படும்! தவிர்க்க முடியாது! எனவே, ஆளுங் கட்சியினராகிய காங்கிரஸ் தோழர்கள், நாங்கள் பேசும்போது சற்று உன்னிப்பாக கவனிக்க வேண்டுகிறேன்.

"என்னடா இப்படி முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு பேசுகிறான்' என்று, எண்ண வேண்டாம். எங்கள் காஞ்சிபுரத்தில் தேர் இழுக்கும் போது, முட்டுக்கட்டை கொடுத்துக்கொண்டுதான் தேர் இழுக்கிறார்கள். ஏன்? தேர் ஒழுங்காக நடக்கவேண்டும் என்றுதானே! அதுபோலவே, நாங்களும், ஆட்சி பீடம் என்கிற 'தரை நடத்திச்செல்லும் காங்கிரஸ் தோழர்களுக்கு முட்டுக்கட்டையாகக் காணப்படுகிறோம்.

இது எமது ஆட்சி!

இப்போதிருக்கிற ஆட்சி வெள்ளையன் ஆட்சியல்ல. விக்கிரமாதித்தன் ஆட்சியுமல்ல. நமது மந்திரிகள் கூடுவிட்டுக் கூடு பாய்கிறவர்களுமல்ல. (வேண்டுமானால் சில சமயங்களில் கட்சியை விட்டு கட்சி பாய்வார்கள்!) இப்போது நம்மை நாமே ஆள்கிறோம். முன்பு வெள்ளைக்காரன் ஆண்டான். என்ன கஷ்டம் வந்தாலும் அவன் மேல் பழியை போட்டுவிட்டு இருக்கலாம்.

இப்போது அப்படிச் சொல்லித் தப்பிக்கமுடியாது. இப்போது இல்லாமை, போதாமை, கஷ்டங்கள் வந்தால் அதற்கு நாம்தான் பொறுப்பாளி. ஒருவன் வாடகை வீட்டில் குடியிருந்தபோது ஜன்னலில் ஓட்டை இருக்கிறதே என்று வீட்டுக்குச் சொந்தக்காரனைக் குறை கூறிக்கொண்டிருந்தான். பின்பு, அதே வீட்டை சொந்தமாக வாங்கினான். அப்படி வாங்கியவன் முதலில் ஜன்னலில் இருந்த ஓட்டையை அடைக்கவேண்டாமா? வாடகைக்கு விடுவிட்டவனோ, மற்றவனோ வந்து ஏனப்பா! ஜன்னல் ஓட்டையைப் பற்றி பிரமாதப்படுத்திக்கொண்டிருந்தாயே! இன்னும் ஏன், அதை அடைக்காமல வைத்திருக்கிறாய்? என்று கேட்டால் என்ன பதில் சொல்லுவது?

இதைத்தான் காஞ்சி. கலியாணசுந்தரம் சொன்னார். நானும் இதையே சொல்கிறேன். நாங்கள் சொல்வது ஆட்சியாளருக்குப் புரியவில்லை. மனிதன் துன்பச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கிறான். ஆட்சியாளர் சொல்லுகிறார்கள்: "சங்கிலியில் ஒரு வளையை எடுத்து விட்டால் போதும், மனிதன் சுகமாக இருப்பான்" என்று. நாங்கள் சொல்கிறோம். "சங்கிலியை அடியோடு அறுத்தெறிய வேண்டும்" என்று. இதுதான் எங்களுக்கும் அவர்களுக்குமுள்ள பேதம்.

இங்கு ஏன் கஷ்டம்......!

இந்த நாடு என்ன அரேபியா, ஆப்பிரிக்கா போன்ற பாலைவனமா? ஜெர்மனியைப் போல், இங்கிலாந்தைப்போல் நிலக்கரியும் பெட்ரோலும் தவிர, வேறொன்றும் கிடையாதா? அப்படியும இல்லையே! நம்முடைய நாட்டிலேதான் காலடியில் தங்கம் இருக்கிறது! நம்முடைய நாட்டிலேதான் கடலடியில் முத்து இருக்கிறது! மூன்று பக்கம் கடல்! இரண்டு பக்கம் மலை! நாலாலும் மலையாலும் கிடைத்த இயற்கை அரண்! எவரும் படை எடுக்க முடியாது! நன்செய் புன்செய் ஏராளம்! இங்கு ஏன் பஞ்சம்? இங்கு இயற்கை தனது வள்ளல் தன்மையைக் காட்டியிருப்பதுபோல், வேறெங்கும் காட்டக்கிடையாதே! பஞ்சம் இருப்பது ஏன்? இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது. ஏனையா பஞ்சம்? இதைக் கேட்டு நாம் வெட்கப்பட வேண்டாமா? நமக்கு ஏன், வெளியிலிருந்து உணவு வரவேண்டும்?

பண்டித நேரு அமெரிக்கா போனார். அங்கு அவருக்கு வரவேற்பு அமோகமாக இருந்தது. அதனால் என்ன பயன்? அங்கு (அமெரிக்காவில்) தேவைக்கு மேல் கோதுமை விளைந்து கிடக்கிறது. நமது பண்டிதர்அவர்களிடம் போய் கோதுமையைக் கேட்டார். "எங்களுக்குத் தருமமாகத்தர வேண்டாம். நாங்கள் பணம் தருகிறோம்.ஆனால்.விலையாய மாக இருக்க வேண்டும்" என்றுசொன்னார். அமெரிக்கா ஒப்புக்கொண்டதா? இல்லை! மறுத்துவிட்டது! டாலர் மாற்றங்களில் ஏற்படும் குறைவுகளை எடுத்துக்காட்டி, கோதுமையை விலை குறைக்கமுடியாதென்று கூறிவிட்டது! அந்த நாட்டுடன் உறவும் சல்லாபமும் ஏன்? நம்மால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாதா? முடியும். எப்படிஇருந்தால் முடியும்? திராவிடம் தனி நாடாகி வந்தால் முடியும்!

இப்போதுள்ள நிலை என்ன?

நமக்கு உணவில்லை என்றால் நாம் சென்னை சர்க்காரைக் கேட்போம், அது வட இந்திய சர்க்காரைக் கேட்டுத்தான் பதில் சொல்லும்! நமக்குக் கல்வி இல்லை. அதிலும், பெண்களுக்குக்கல்லூரிஇல்லை என்று, நமது கல்வி மந்திரி மாதவமேனனைக் கேட்டால், அவர், தானாகவே கல்லூரி ஏற்படுத்திக் கொடுக்க முடியுமா? உடனே டில்லி சர்க்காரைத்தான் கேட்பார். டில்லி சர்க்கார் இப்போது இதையெல்லாம் கவனிக்கப் பணம் இல்லை என்று சொல்லிவிடும். இப்படியே எதற்கெடுத்தாலும் டில்லி நோக்கி நிற்கும் கொடுமையொழியவேண்டும். இதைத் தான் திராவிடர்கழகமும் திராவிடமுன்னேற்றக்கழகமும் எடுத்துக்காட்டி, திராவிடம் தனியாகவேண்டுமென்று கேட்கின்றன. டில்லி சர்க்

(6-ம் பக்கம் பார்க்க)

மந்திரக்கோல் கொண்டு ....

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

காரின் பிடியில் மாகாணங்கள் சிக்கிக்கொண்டதால் ஏற்படும் தொல்லைகள் கொஞ்சமா? உதாரணமாக சென்னை அரிசி விளைத்துச் சென்னை, டில்லி, கரும்பு விளைத்துச் செல்லும் ஏன்? அங்கே சர்க்கரை தேவை! இங்கு அரிசி தேவை! அதனால்தான், மாகாண சர்க்காருக்கு அதிகாரம் அதிகம் இருக்கவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் வாதாடுகிறது.

பி. எஸ். குமாரசாமியாரும், மாதவமேனனும் அருப்புக்கோட்டை வருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இங்கு பெண்களுக்கு ஓர் கட்டடம் வேண்டுமென்று அவர்களிடம் கேட்பதாக வைத்துக் கொள்வோம். அவர்கள் என்ன சொல்லுவார்கள்? ஆம்; கல்வி அவசியந்தான்! அதிலும் பெண்களுக்கு கல்வி அவசியம்! ஆனால், சர்க்காரிடம் பணம் இல்லை. பணக்காரர்களிடம் நன்கொடை வசூலித்து கட்டிடம் கட்டுங்கள். திறப்பு விழாவுக்கு மட்டும் எங்களை மறந்துவிடாதீர்கள்! என்றுதான் சொல்வார்கள். ஏன் அப்படிச் சொல்வார்கள்? ஆம்; அவர்கள் வேறென்ன செய்ய முடியும்? பெட்டிச்சாவி அவர்களிடம் இல்லையே! அது, டில்லி சர்க்காரிடமல்லவா இருக்கிறது! என்பதுதான். குமாரசாமியாரிடத்திலும், மாதவமேனனிடத்திலும் பெட்டிச் சாவியைக் கொடுங்கள் என்கிறோம் நாம். அப்படி நாம் கேட்பதில் தவறு ஒன்றும் இல்லை. அக்பர், அசோகன், கனிஷ்கர், விக்கிரமாதித்தன் ஆகியோர்கள் வட இந்தியாவில் பெரிய பெரிய சாம்ராஜ்யங்களை ஸ்தாபித்தவர்கள். அக்பர் காலத்திலும் சரி, அசோகன் காலத்திலும் சரி; அவர்களுடைய சாம்ராஜ்யங்கள் விந்தியமலைக்குத் தெற்கே தாண்டி வர முடியவில்லை. மகாவிஷ்ணுவின் 10 அவதாரங்களும் வடக்கே வந்ததற்கு அடையாளம்தான். இங்கு ஓர் அவதாரம் கூட எடுக்க முடியவில்லை. காஞ்சிபல்லவன் ஆண்ட காலத்தில், வட இந்தியாவிலிருந்து புலிகேசி என்பவன் வந்து மலையைக் கடந்து காஞ்சிமேல் படையெடுத்து வந்தான். அப்போது பல்லவன்; பரஞ்சோதி என்கிற திராவிடனைத் தனது படைத்தலைவனாக்கி புலிகேசியை வட இந்தியா வரை விரட்டியடித்தான். அந்த பரஞ்சோதி தான் பெரிய புராணத்தில் வருகிற சிறுத்தொண்டன். இப்படி ஆண்டிருப்பவர்கள் தான் இங்கே இப்போ வென்றாக்களே அவர், அங்கிருப்பவர்கள் ஒரு காலத்திலும் நம்மை வென்றது இல்லை. அடிபட்டு ஓடியது உண்டு. ஆட்டம்போடும் காலம் டில்லி சர்க்காரிடம் சிக்கி மாகாணம் பணமில்லாமல் திண்டாடுகிறோம்.

எந்த சர்க்காரும் பணமில்லாமல் ஒன்றும் செய்ய இயலாது. சர்க்கார் நமக்கு பணம் பெறுவார்கள்; வேறு நிதியில் பாலம் கட்டுவார்கள். வட்டியுடன் வாங்குவார்கள், நமக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவார்கள். பணமில்லையானால் என்ன செய்ய முடியும்? மந்திரக் கோலைக் கொண்டு ஆள முடியுமா?

Incometax, Excisetax

அதிக வருமானம் தரும் வரி. தேயிலை, தீப்பெட்டி, புகையிலை இவைகள் அதிகமாக வளரும் வரிகள். நிலவரி, விற்பனைவரி இவைகள் வளராத வரிகள். இந்த வரிகளை வைத்துத்தான் ஒரு சர்க்கார் நடக்கும். இப்போது நாம் வளராத வரிகளை வைத்துக் கொண்டிருப்பதால்தான் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதாவது சென்னை சர்க்காருக்குக் கிடைக்கும் முக்கிய வருமானம், நிலவரி, விற்பனை வரி இரண்டுதான். மீதி வரிகளெல்லாம் மத்திய சர்க்காரைச் சேர்ந்தவை.

இப்படி வளராத வரிகளை வைத்துக் கொண்டிருப்பதால் தான், சென்னை சர்க்காரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மத்திய சர்க்கார் எப்படி இருக்கிறது என்றால், "பஜனைக் கோவில் திருவிழாவுக்கு உங்களுடைய வருமானத்தை யெல்லாம் கொடுங்கள்" அதில், செலவானதுபோக மீதமிருந்தால் திருப்பித்தருகிறோம்" என்பது போல, டில்லி சொல்லிக் கொண்டிருக்கிறது அதாவது இன்கம் டாக்சியையும், எக்சைஸ் வரியையும் எங்களிடம் கொடுங்கள்! எங்கள் பட்டாளங்களுக்கு செலவுக்கு வேண்டியிருக்கிறது! அதுபோக, மிச்சப் பணமிருந்தால் மாகாணச் செலவுகளுக்குத் தருகிறோம் என்று டில்லி சொல்லுகிறது. நாங்கள் கேட்கிறோம்; பட்டாளத்தை வைத்திருங்கள்! அதன் செலவுக்கு வட இந்திய முதலாளிகளிடம் 100-க்கு 50 வீதம் பணம் வாங்குங்கள் என்று.

இதை மந்திரிகள் கேட்பார்களா? கேட்கமாட்டார்கள்! கேட்டால் மந்திரியாக இருக்க மாட்டார்கள்!

இனி வரும் அரசியல்!

இப்போது வருகின்ற அரசியல் ஏகாதிபத்திய மறுபதிப்புதான். முன்பு, வெள்ளையன் ஆண்டான், 93-வது செக்ஷன்படி இனிமேல் நடப்பது பாதை வேறே தவிர, நடப்பு ஒன்றுதான். நாளை வங்க மாகாணத்தில் சரத் போஸ் சர்க்கார் இருக்கும். ஐக்கிய மாகாணத்தில் தாண்டன் சர்க்கார் இருக்கும். சென்னையில் காமராஜா கவர்ன்மெண்டு நடைபெறும். மாகாண சர்க்கார்களுக்கும், மத்திய சர்க்காருக்கும் இடையே தகராறு வந்தால் டில்லி என்ன செய்யும் தெரியுமா? உங்களுக்கு ஆளத் தெரியாது. எனவே, தேர்தல் ஒத்திவைத்திருக்கிறோம். பங்க மகாராஜாவை அதுவரை ஆளும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று கூறிவிடும்.

இப்படி டில்லியின் தலைமையில் மாகாணங்கள் சிக்கிக்கொண்டு சீரழியும், இது மட்டுமா? வடக்கே இரும்பு, சிமிண்டு வியாபாரம், குழந்தைக்குக் கொடுக்கும் மருந்து, ரயிலுக்கு உபயோகப்படும் ஆணி, சாவுக்குப் போடும் மருந்து, எல்லாம் வட இந்தியாவில் தயாரிக்கப்பட்டதாக இருக்கும். நாம் கட்டிக்கொள்ளும் ஆடைகள் ஜோலாப்பூர் தயாரிப்பு. விளம்பரங்களெல்லாம் வட இந்தியாவை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கும். இங்குள்ளவர்கள் சாமி பாபாவையும், ராமகிருஷ்ண பரமஹம்ஸரையும், அரவிந்தரையும் புகழுவார்கள். இவர்களை பட்டினத்தாரையோ, இராமலிங்க அடிகளையோ, வடநாட்டாருக்குத் தெரியவே தெரியாது.

எல்லா அதிகாரங்களும் டில்லி சர்க்காரிடம் இருக்கும். அங்கே டாடாக்கள், பிர்லாக்கள் வைத்ததுதான் சட்டம்! இந்த நிலையில், சிறிய தென்னாடு வளர முடியுமா?

நாகப்பட்டினத்தில் இரும்புத் தொழிற்சாலையொன்றை நம்மவர்கள் ஆரம்பித்தார்கள். டாடாவுடன் போட்டிபோட முடியாமல் மூட வேண்டிய நிலைமைக்கு வந்தது. முடிவில் டாடாவுக்கே அந்தத் தொழிற்சாலையை விற்றுவிட்டனர். நம்மிடம் அதிகாரம் இருந்தால் இக்கதிக்கு அந்தத் தொழிற்சாலை வந்திருக்குமா? நம் வீட்டின் ஜன்னல் நம்மால் பூட்டவும் திறக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அடுத்த வீட்டுக்காரன் கையில் பூட்டும் திறப்பும் இருந்தால் என்ன பயன்? அதுபோலவே, அதிகாரங்களும் நம்மிடம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் டில்லி நோக்கவேண்டியதுதான்.

டில்லி அதிகாரம் நம்மை விவசாய மக்களாக ஆக்கிவிடும்! விவசாய நாடாக நமது நாடு ஆனால், டில்லி, லண்டன் ஆகிவிடும்—பாரீஸ் ஆகிவிடும். நாம் பஞ்சைகளாகி விடுவோம்.

தொழிற் போட்டியைத் தடுக்க அதிகாரம் நம்கையில் இருக்கவேண்டும். காஞ்சி கல்யாண சுந்தரம் சொன்னார் சர்க்கரையைப்பற்றி. சர்க்கரை விலையைத் தடுக்க நம்மிடம் என்ன இருக்கிறது? இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை சமாளிக்க ஒரு 'கோட்டை' வேண்டும். அந்தக் கோட்டைதான் அதிகாரம். வடக்கே 6 அணாவுக்கு விற்ற சரக்கை ஒரு ரூபாய்க்கு விற்று கொழுத்த பணக்காரர்கள், இலண்டனை விலைக்கு வாங்கும் அளவுக்கு அவர்கள் பணம் படைத்திருக்கிறார்கள். அவர்களிடம்தான் அதிகாரமும் இருக்கிறது!

அருப்புக்கோட்டைக் கைலியை வாங்க டாடா ஏஜண்டு ஒருவன் வருவான். அப்போது கைலி நல்லவிலைக்கு இங்கு விற்றுக்கொண்டிருக்கும். உடனே அவன் என்ன செய்வான் தெரியுமா? மத்திய சர்க்கார் ஆபீஸில் ஒருகிளார்க்கைப் பிடிப்பான். வெளிநாடுகளுக்கு கைலி ஏற்றுமதி செய்யும் வியாபாரிகளிடம் இனிமேல் ஏற்றுமதி கிடையாது என்றும், சர்க்கார் அப்படித் தீர்மானித்திருக்கிறது என்றும் அந்தக் கிளார்க்கைக்கொண்டு சொல்லும்படி செய்வான். உடனே அருப்புக்கோட்டை கைலி மார்க்கெட்டில் விலை இறங்கிவிடும். அப்படி விலை இறங்கிய உடனே, டாடாவின் ஏஜண்டுகள் கைலிகளை ஏராளமாக வாங்குவார்கள். வெளிநாட்டு மார்க்கெட்டுகளுக்குக் குறைந்த விலையில் கைலி தருகிறோம் என்று டெலிபோனில் பேசுவார்கள். நம்முடைய வியாபாரிகள் வியாபாரம் முறிந்து, மார்க்கெட்டை இழந்து நஷ்டமடைவார்கள். யுத்த வீரனின் வாள் செய்யாத கொடுமையை, முற்கால மகரிஷிகளின் யோக தண்டம் செய்யாத கொடுமையை டெலிபோன் செய்யும்!

கள்ளர்களுக்கு ஆதரவு

நீங்கள் பத்திரிகையில் படித்திருப்பீர்கள் 'இன்னும் 15-வருடம்வரை தொழிற்சாலைகளை தேசியமயமாக்கமாட்டோம்" என்று சர்க்கார், முதலாளிகளுக்கு ஆதரவு காட்டியிருப்பதை;

கள்ளர்களைப் பிடிக்கமாட்டோம் என்று சர்க்கார் ஒரு நோட்டீஸ் வெளியிட்டால் எப்படி இருக்குமோ அதுபோலவே, தொழிற்சாலைகளை தேசியமயமாக்கமாட்டோம் என்பதும். சிலநாட்களுக்கு முன் பண்டிதர் சொன்னார், "கள்ள மார்க்கெட்காரர்களைத் தூக்கில் போடுவோம்" என்று இப்போது அந்த கள்ள மார்க்கெட் காரர்களிடம் போய் கணக்கைக் காட்டுங்கள், நாங்கள் உங்களை ஒன்றும் செய்யவில்லை என்று கெஞ்சுகிறார்கள்! புலியைப் பார்த்து "ஏ புலியே! உன் பல்லைப் பிடுங்க வேண்டும் வாயைத்திற" என்றால் திறக்குமா? இப்படியாக டில்லியை ஆட்டுகிறார்கள் முதலாளிகள்.

வருங்காலத் தேர்தலில் நமது காங்கிரஸ் மந்திரிகளே முழக்கமிடப்போகிறார்கள், வடநாட்டு முதலாளிகள் அரசியலைக் கைப்பற்றுகிறார்கள் என்று. நாங்கள் முதலில் சொல்லுவோம். சொல்லும்போது கேலி செய்வார்கள். பிறகு நாங்கள் சொன்னதை அவர்கள் சொல்வார்கள். இதுதான் இங்கு வழக்கம்! நாங்கள் ஒருகாலத்தில் தமிழ்நாடு தமிழருக்கே! என்று சொன்னபோது, 'ஆனந்த விகடன்' புலி வாலை எலிகளுக்கு! என்று கேலி செய்தது. இப்போது நாங்கள் ஒலித்த அந்த ஒலியை, காங்கிரஸ் மந்திரிகளே ஒலித்துக்கொண்டிருக்கிறார்கள்.

நான் இதுவரை சொல்லி வந்தவைகள்தான், எங்கள் கழகத்தின் பொருளாதார அரசியல் திட்டங்கள். நாங்கள் ஏன் வட இந்தியாவினின்றும் பிரிந்துகொள்ள விரும்புகிறோம், என்பதில் யாருக்கும் ஐயமிருக்காதென்று நம்புகிறேன் என்று கூறி முடித்தார். தோழர் எம். எஸ். துரைசாமி நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

சென்னை சர்க்கார் வகுப்புவாரி பிரதிநிதித்வக் கொள்கை

சர்க்கார் சர்வீஸ்களிலும் கலாசாலைகளிலும் (மற்றவை) ஸ்தாபனங்களிலும் வகுப்புவாரி முறைப்படி சென்னை சர்க்கார் கொள்கை [illegible] பற்றி இந்திய சர்க்காருக்கு அறிவித்துவிட்டதென மந்திரி தோழர் பி. கோபால் ரெட்டி [illegible] சட்டசபையில் குறிப்பிட்டார்.

சென்னையில் துறைமுக நிர்வாகிகள் மாநாடு

பெரிய துறைமுக நிர்வாகிகளின் மூன்று நாள் மாநாடு, இந்திய சர்க்கார் ரயில்வே-போக்குவரத்து மந்திரி தோழர் என். கோபாலசாமி அய்யங்காரின் தலைமையில் இன்று இங்கு ஆரம்பமாயிற்று. பெரிய துறைமுகங்களின் நிர்வாகிகள் ஒன்றுகூடி துறைமுக நிர்வாகம், அபிவிருத்தி ஆகியவை சம்பந்தமான பொது விஷயங்கள் பற்றிக் கருத்துக்களை வெளியிட்டுப் பிறர் கருத்துகளை அறிந்து கொள்ளவும், தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் வசதி செய்வதே இம்மாநாட்டின் நோக்கமாகும். இப்பொழுது நடைபெறுவது இரண்டாவது மாநாடாகும். முதலாவது மாநாடு சென்ற ஆண்டு பம்பாயில் நடைபெற்றது.

துறைமுக நிர்வாக விஷயங்கள் பற்றி சென்ற ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் செய்யப்பட்ட சிபாரிசுகளை யொட்டி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்த பிறகு, துறைமுக நிர்வாகம் சம்பந்தமான சட்டங்களை அமுல் நடத்துவதில் தோன்றிவரும் முரண்பாடுகளை அகற்றி, சட்டதிட்டங்கள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கும்படியும், எல்லாத் துறைமுகங்களும் மத்திய அதிகாரத்துக்குட்பட்டிருக்கும்படி செய்யப்படுவது தற்போதுள்ள துறைமுக சட்டங்களில் செய்ய வேண்டிய திருத்தங்கள் பற்றி இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பகுத்தறிவுப் பாடல் போட்டி

தூத்துக்குடி வடக்கூர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் வருகிற தை திங்கள் முதல் நாள் (14—1—50) மாலை 4 மணிக்குப் பகுத்தறிவு பாடல் போட்டி நடைபெறும். இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் தோழர்கள் (12—1—50)ல் மாலை 6 மணிக்குள் கழகச் செயலாளரிடம் வந்து தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பகுத்தறிவைக் குறிக்கோளாகக் கொண்டும், மூடப் பழக்கவழக்கங்களைக் கண்டிக்கக்கூடியதுமான பாடல்களை தாமே சுயமாகவோ வேறு எங்கேனுமிருந்தோ மனப்பாடம் செய்து பாடலாம். பஞ்சாயத்தார் தீர்ப்புப்படி முதல் பரிசு ரூ. 15 பெறுமதியான பொருளும் இரண்டாவது பரிசு ரூ. 10 பெறுமதியான பொருளும் மூன்றாவது பரிசு ரூ 5 பெறுமதியான பொருளும் கொடுக்கப்படும். போட்டியில் கலந்துகொள்ளும் தோழர்கள் மூன்று பாடல்கள் பாட வேண்டும்.

செயலாளர், தி. மு. கழகம்,
டேவிஸ்புரம் ரோடு,
வடக்கூர், தூத்துக்குடி.

கொப்பரை ஏற்றுமதி தடை

இலங்கை சர்க்கார் உத்தரவு

கொழும்பு, ஜன. 7— இலங்கையிலிருந்து தேங்காய், கொப்பரை இவைகளை ஏற்றுமதி செய்யக் கூடாதென்று இலங்கை சர்க்கார் தடையுத்தரவு ஒன்றை பிறப்பித்திருக்கின்றனர். இத் தடை சிலகாலம் நீடித்திருக்கும் என்று தெரிகிறது.

இலங்கையிலேயே கொப்பரை விலை ஏகமாக ஏறிவிட்டதாலேயே இந்தத் தடைவிதித்ததாம். இதனால் இப்பொழுது தேங்காய் எண்ணெயை மட்டுமே ஏற்றுமதி செய்யமுடியும்.

உணவு உற்பத்தியைப் பெருக்கக் கூட்டுறவு விவசாயப் பண்ணைகள்

மாகாணங்களில் விவசாயப் பெருக்கத் திட்ட விவரம்

புதுடில்லி, ஜன. 6—

உணவு உற்பத்தியைப் பெருக்கக் கூட்டுறவு முயற்சியில் இப்பொழுது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருவதாக, மாகாணங்கள் சமஸ்தானங்களிலிருந்து மத்திய விவசாய மந்திரி காரியாலயத்துக்குக் கிடைத்துள்ள சமீபத்திய அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. சௌராஷ்டிர மாகாண சர்க்கார், அச்சமஸ்தானத்தில் கூட்டு விவசாயப் பண்ணைகள் அமைக்கப்படுவதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு கூட்டுறவு ஆலோசனை சபை யொன்றை அமைத்திருக்கின்றனர். சென்னையில், ஒதுக்கப்பட்ட காட்டுப் பிரதேசங்களிலிருந்து, விவசாயத்துக்காக மாகாண சர்க்கார் விடுவித்துள்ள நிலங்களில் சாகுபடி வேலையைத் தொடங்குவதற்காக சில குடியேற்றக் கூட்டுறவு சங்கமொன்று அமைக்கப்படுகிறது.

மத்திய மாகாணத்தில் கிராமாந்தரங்களில் குப்பை உரம் தயாரிப்பதற்கான புதியதொரு திட்டத்தை, அம்மாகாணத்தைச் சேர்ந்த ஜனபத சபை யொன்று தயாரித்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு கிராமத்தில் வசிப்பவர்கள் 150 ரூபாய் செலுத்தினால் அந்த கிராமத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளும் பொறுப்பை ஜனபத சபை ஏற்றுக்கொள்கிறது. கொட்டில்களிலிருந்து குப்பைகளை அகற்றி சுத்தம் செய்ய இந்த சபை வேலையாட்களை நியமிக்கிறது. இவ்வாறு சேர்க்கப்படும் குப்பை, சபையின் பொறுப்பில் உரமாக்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்கப்படுகிறது. பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள், நிலமீட்சி, கிணறு வெட்டுதல் குப்பை உர உற்பத்தி முதலிய மற்ற துறைகளிலும் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பாசன வசதிகள்

பீகாரில் 1949-ல் அமைக்கத்திட்டமிட்டிருந்த 4000 கிணறுகளில் 3843 கிணறுகள் நவம்பருக்குள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 123 சிறு பாசனத்திட்டங்களும் நவம்பரில் நிறைவேற்றி வைக்கப்பட்டன. 14 குழாய்க் கிணறுகளும், 80 ரஹாத் பம்புகளும் நிர்மாணிக்கப்பட்டன.

கிழக்குப் பஞ்சாபில், சுமார் 380 பழைய கிணறுகள் மராமத்து செய்யப்பட்டன. டிசம்பர் மத்திவரை மொத்தம் 1235 கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 557 கிணறுகளில் கட்டிட வேலை நடைபெற்று வந்தது. 1949-க்குள் மொத்தம் 2000 கிணறுகள் வெட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. சென்னையில் டிசம்பர் மாதமுதல் இரண்டு வார காலத்தில் 226 கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டன.

மைசூர் சர்க்கார், பாசன வேலைகளுக்கு மின்சார வசதியளிப்பதற்கான 3-வருடத் திட்டமொன்றை சென்ற ஆண்டு ஆரம்பித்துவைத்தனர். இந்தத் திட்டத்தின் கீழ் சென்ற வருடம் சுமார் 100 பம்புகளுக்கு மின்சார வசதி ஏற்பாடு செய்துகொடுக்கப்பட்டது. 300 கிணறுகள் கட்டப்பட்டிருக்கின்றன. 770 சிறு குளங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

திருவாங்கூர்-கொச்சி யூனியனில், சமீபத்தில் மழையின்மையால் பயிர்கள் பாதிக்கப்பட்டுவிடுமென்ற நிலைமை ஏற்பட்டபோது, அவ்வாறு பாதிக்கப்பட்டபிரதேசங்களுக்கு உடனடியாகப் பாசனவசதி செய்து கொடுக்க அந்த சர்க்கார் ஏற்பாடு செய்தனர், விதைப்பை பல தவணைகளில் செலுத்துவ

சென்ற ஏற்பாட்டில், 15 பம்பு செட்டுகளை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கின்றனர்.

நிலமீட்சி வேலை

மைசூரில் சுமார் 40,000 ஏக்கர் நிலப்பரப்பில் இதுபோல சாகுபடிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு இனியே இப்பகுதிகளை அடையப் பண்ணுக்கு கொண்டுபோதல் செய்ய மைசூர் சர்க்கார் விசேஷ ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். ஒரிஸ்ஸாவில் தரிசு நிலங்களைத் திருத்தின பண்படுத்தவர்களுக்கு ஏக்கருக்கு 25 ரூபாய் வீதம் போனஸ் அளிக்கப்படுகிறது.

சென்னையில்; டிசம்பர் 15-ந் தேதியுடன் முடிவடைந்த இரண்டு வாரங்களில் 1,863 ஏக்கர் தரிசு நிலம் விவசாயத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது: பீகாரில் சென்ற ஏப்ரலிலிருந்து நவம்பர் வரையுள்ள 8 மாத காலத்தில் 24,000 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டு சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஐக்கிய மாகாணத்தில் நவம்பர் மாத மத்தியிலிருந்து இதுவரை மொத்தம் சுமார் 1000 ஏக்கர் தரிசு நிலம் திருத்திப் பண்படுத்தப்பட்டிருக்கிறது. கிழக்கு பஞ்சாபில் அக்டோபர் இறுதிவரை சுமார் 6459 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டு 5,763 ஏக்கரில் டிராக்டர்கள் கொண்டு விவசாயம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் சுமார் 3,535 டன் தானியம் அதிகப்படியாகக் கிடைக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

குப்பை உர உற்பத்தி

கிழக்கு பஞ்சாபில் கிராமங்களில் 1,82,970 டன் குப்பை உரம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நகரங்களில் குப்பை உரத் தயாரிப்பு, வேலைக்காக அம்மாகாண சர்க்கார் 2,12,000 ரூபாய் கடன் கொடுத்துதவ அனுமதித்திருக்கின்றனர். நகரங்களில் தயாரிக்கப்படும் உரத்தைக் கிராமங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக 18 மோட்டார் டிராக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு சுத்தமான விதைகள் வினியோகிக்கப்பட்டு வருகின்றன. மேற்கு வங்காள சர்க்கார் சென்ற வருஷம், ரசாயன எரு, குப்பை உரம், பிண்ணாக்குகள் முதலியவை உட்பட, மொத்தம் 32,335 டன் எருவை விவசாயிகளுக்கு வினியோகித்திருக்கின்றனர்.

ஆங்கில மொழியிலேயே நீளயான சொற்றொடர்

லண்டன், ஜன. 6—

சர் ஆல்பர்ட் ஹிட்செல்ஸன் [illegible] எழுதியுள்ள ஒரு புத்தகத்தில் 218 வார்த்தைகள் கொண்ட ஒரு வாக்கியம் இருக்கிறதாம். இதை எடுத்து ஒரு பிரிட்டிஷ் பத்திரிகை பிரசுரித்து ஆங்கில மொழியிலேயே மிக மிக நீளமான வாக்கியம் இதுதான் என்று எழுதியிருக்கிறது.

[illegible] இது ஒன்றும் பெரிய வாக்கியமல்ல [illegible] என்று [illegible] எழுதியுள்ள புத்தகத்தில் இதைவிட பெரிய வாக்கியம் காணப்படுகிறதென்று கூறுகிறார். இந்த வாக்கியம் 4130 வார்த்தைகள் கொண்டதென்றும் இது 8 பக்கங்கள் கொண்டதென்றும் அவர் கூறுகிறார். —ரூலோப்

சர்க்காரின் உணவு சுயதேவை நிறைவுத் திட்டம்

புதுடில்லி, ஜன 8—

1951-ம் ஆண்டுக்குப் பிறகு, வெளிநாடுகளிலிருந்து உணவு இறக்குமதி செய்யாமலே தற்போதுள்ள மக்கள் தொகைக்குத் தற்போது செலவாகிவரும் அளவுகளில் உணவு அளிப்பதையும், மக்கள் தொகை அதிகரிக்கும் போது, அதற்கேற்பபடியுள்ள மக்களுக்குத் தற்போதைய அளவுகளில் உணவு கிடைக்கும்படி செய்வதையும் பிரதான நோக்கமாகக் கொண்டே சர்க்காரின் உணவு சுயதேவைப் பூர்த்தித் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் திட்டங்களெல்லாம், தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிப்பதற்கான உபாயங்களாகவே கருதப்பட வேண்டும். ஆகவே, சிறந்தமாக இருக்கக்கூடிய பலன்களை வெகு சீக்கிரமாக அளிக்கக் கூடிய திட்டங்களே இந்த சமயத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய சிறந்த திட்டங்களாகும். உணவு இறக்குமதிகளை நிறுத்திவிட வேண்டுமென்பதையே உடனடியான லட்சியமாகக் கொண்டிருப்பதால், உணவு தானிய உற்பத்தியில் மட்டுமே இப்பொழுது அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது.

போருக்கு முன்னால் இந்தியா பெரும்பாலும் பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்து வந்தது. ஜப்பானியர் பர்மாவை ஆக்ரமித்துக் கொண்ட பிறகு இந்த இறக்குமதிகள் திடீரென நின்று போனதால், இந்தியாவில் உணவு நிலைமை மோசமாகிவிட்டது. உணவுப் பிரச்னை, 1943 முதலே இந்தியாவின் முதன்மையானதொரு பிரச்னையாக இருந்து வந்திருக்கிறது. உணவு "உற்பத்திப் பெருக்க இயக்கத்தை" அந்த வருடத்திலேயே இந்திய சர்க்கார் ஆரம்பித்து வைத்தனர். ஏற்கனவேயுள்ள நிலங்களில் தீவிர விவசாயம் நடத்துவதன்மூலமும், வாணிபப் பயிர்களை உணவு தானிய சாகுபடிக்குத் திருப்புவதன்மூலமும் உற்பத்தியைப் பெருக்குவதற்கான தற்காலிகத் திட்டங்களே, இவ்வியக்கத்தின் ஆரம்ப கட்டங்களில் அநுசரிக்கப்பட்டு வந்தன. உணவு உற்பத்திப் பெருக்க இயக்கம் ஒரு திட்டமான அடிப்படையில் அமைக்கப்பட்டது, 1947-ல் என்றுதான் கூற வேண்டும். ஒவ்வொரு மாகாணமும் சமஸ்தானமும் அதிகப்படியாக உற்பத்திசெய்ய வேண்டிய உணவுதானியங்களின் லட்சிய அளவுகள் நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டன. உணவு தானிய உற்பத்திக்கு 5 ஆண்டுத் திட்டமொன்று வகுக்கப்பட்டு, அத்திட்டத்தின்படி மாகாணங்கள் 30 லட்சம் டன்னும் சமஸ்தானங்கள் 10 லட்சம் டன்னும் உற்பத்திசெய்யவேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது. இந்த ஐந்து ஆண்டு திட்டம் 1951-52 இறுதிக்குள் நிறைவேற்றி வைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்தியக் குடியரசு துவக்கவிழா சிங்கப்பூரில் கொண்டாட ஏற்பாடுகள்

சிங்கப்பூர், ஜன. 6—

இந்தியக் குடியரசு துவக்க விழாவையொட்டி ஒரு பொதுக்கூட்டத்தை ஜாலான் [illegible] ஸ்டேடியத்தில் ஜனவரி 26-ல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்தியக் கொடி பறக்க அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மலேயா சர்க்கார் ஆலோசித்து வருகிறதென்று சாக்கரா சிங்கப்பூர் இந்திய காங்கிரஸ் குழு தெரிவித்திருக்கிறது.

தாலாட்டு

[மூவாலூர் இராமாமிர்தத் தம்மையார்]

1. கண்ணே நீ யுறங்கு கண்மணியே நித்திரைபோ
மகனே நீயுறங்கு மறத்தமிழா நித்திரைபோ
2 ஆளப் பிறந்தகண்ணே அரசாள வந்தவனே
வாழப் பிறந்தகண்ணே வடிவழகா நித்திரைபோ
3 வீரத்தமிழ் மகனே வீரத்தாய் பெற்றவனே
வீணர்கள் இங்கு வந்து வீழ்த்திடவிட்டார் நம்-
4. தென்றேன மதுகுலம் ஒருவனே தேவனென்று [இனத்தை
ஓங்கி வாழ்ந்தகம்மை ஒழித்துவிட்டார் சூதர்கள்
5 கரிகாலன் ஆண்டநாடு கண்ணகியின் பிறந்தநாடு
புகழ்மிக்கத் தமிழ்நாடு பொற்கிளியே அறிவாயடா
6 சோழனைப் பெற்றநாடு சீர்பெற்ற உன்னாட்டை
பிழைக்க இங்கு வந்தவர்கள் பிடுங்கிக்கொண்டார்-
7. நாடு உன்னதடா நன்மகனே நீயறிவாய் [நம்புகழை
அறிவாய் அறிவாயடா அறிந்தபின் நலம்பெறுவாய்
8. தாழ்ந்த தமிழகத்தை தரணியில் உயர்த்திடுவாய்
தங்கமே நீமுனைந்தால் தடுப்பவர்கள் உண்டோடா
9 சூரர்குலத்துதித்த சுந்தரனே நம்மையவர்
சூத்திரர்கள் என்றுகூறி சூதாகத் தாழ்த்திவிட்டார்
10 வீரப் பெண்குலத்தை விபசாரிக் கூட்டமென்று
வீணர்கள் சொல்லியதை வீரனே நீ போக்கிடுவாய்
11. கொற்கைப் பாண்டியனின் புகழ்தனை அறிந்திலையோ?
புலவர்களின் சொல்லுக்கு புகழேதும் தரலாமோ?
12 தூங்கிவிழித்திடுவாய் தூயஉள்ளம் பெற்றிடுவாய்
துள்ளிவிளையாடிவந்து துயர்தீரச் சிரித்திடுவாய்
13 பார்ப்பன சதிக்கூட்டம் பாழாக்கிவிட்டதடா
பாலகனே அதைபறிந்து பதட்டம்நீ கொள்வாயடா
14 தமிழ்நாட்டுத் தாய்மகனே தங்கமே நீ கண்ணுறங்கு
தமிழின் பெருமைதனை தாரணியில் உயர்த்திடுவாய்
15 செங்குட்டுவன் போலநீ சினங்கொண்டு எழுந்துவிட்- [டால்
சிறுமதியர் தம்கூட்டம் திராவிடம்விட் டோடுமடா
16. கண்ணே கண்மணியே கற்கண்டே செந்தேனே
சம்பூர்ணத்தை வாழவைக்க—நாளை முனைந்திடுவாய

காதற்கடிதம் விளைத்த சிக்கல்

பிரெஞ்சு மாதின மர்மக் கொலை

பாரிஸ், ஜன. 6—

மிக அழகான பிரெஞ்சு மாது மோனிகா தன் இல்லத்தில் ஒரு நாள் திடீரென்று மாண்டு கிடந்தாள். இது விஷமாக அவளுடைய 25 வயதுள்ள கணவன் கைது செய்யப்பட்டு, அவர் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

இந்த மாது இறப்பதற்கு முன் பாரிஸிலுள்ள அவள் காதலன் ஒருவனுக்கு ஒரு காதல் கடிதம் எழுதியிருக்கிறாள் என்பதை போலீசார் கண்டுபிடித்திருக்கின்றனர். "அதில் என் கணவனுக்கு எனது விஷயங்களும் தெரியும். நான் அவரைக் கைவிடப்போவதாக அறிவித்துவிட்டேன். சீக்கிரமே உன்னுடன் வந்துவிடுவேன்" என்று எழுதியிருந்தாள்.

இக்கடிதம் மீதுள்ள தபால் முத்திரையில் காலை 11-30 மணி என்று காணப்படுகிறது. ஆனால் அதே தினத்தில் காலை 6-30 மணிக்கே அந்த மாது இறந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

இக்கடிதத்தை காலை 9 மணிக்குப் பின்பே தபாலில் சேர்த்திருக்கவேண்டும் என்று தபால் அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆகவே அன்று காலை வேலைக்காரர்கள் வரும் முன் கடிதத்தை தபாலில் போட்டதாக ஒப்புக்கொள்ளவில்லை.

சிறையிலுள்ள அந்த மாதின் கணவர் சீக்கிரமே உண்மை வெளிப்படும் என்றும், தன் மனைவி எப்படி இறந்தாள் என்பது தனக்கே தெரியாது என்றும் கூறுகிறார்.

மேற்படி காலில் கொலை செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட மாது பிரசவித்து உயிருடன்தான் என்பதைப் போலீசார் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்த விவகாரம் இன்னும் மர்மமாகவே இருந்து வருகிறது —ரூலோப

எகிப்து தேர்தல் முடிவு

லண்டன், ஜன. 6—

ரேடியோ மூலம் கிடைத்த எகிப்து தேர்தல் முடிவு கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் பெவினிடம் தெரிவிக்கப்பட்டது. இதைப்பற்றி விசேஷமாக அவர் எவ்வித அபிப்பிராயத்தையும் தெரிவித்ததாகத் தெரியவில்லை; எகிப்தில் புது சர்க்கார் ஏற்பட்டதின் விளைவாக பிரிட்டனிலுள்ள எகிப்திய ஒப்பந்த விவகாரத்தில் ஏதாவது இருக்குமா என்பது இன்னும் தெரியவில்லை.

சென்னைக்கு ஒரிஸ்ஸா அரிசி

சென்னை மாகாணத்துக்கு 35,000 டன் அரிசி சப்ளை செய்ய ஒரிஸ்ஸா மாகாணம் சம்மதித்துள்ளது. இதில் 12,000 டன் வரை இப்போது தயாராயுள்ளதாம். இம்மாத இறுதிக்குள் இந்த அரிசி இங்கு வந்து சேர்த்துவிடுமாம்.

சென்னை மாவட்ட

தி. மு. க. முதல் மாநாடு

நாள் :— 22—1—50 ஞாயிறு

நேரம் :— காலை 9-மணிக்குத் துவக்கம்

இடம் :— 'பீப்பிள்ஸ் பார்க்' மிருகக் கண்காட்சி சாலைக்குப் பின்புறமுள்ள மைதானத்தில் 'அழகிரிபந்தலில்'

தலைவர் :— சேலம் ஏ. சித்தையன்

துவக்குபவர் :— மதுரை எஸ். முத்து

இரவு 9-30 மணிக்கு

சி. என். ஏ., கே. ஆர். ஆர். நடிக்கும்

'சந்திரமோகன்' நாடகம் நடைபெறும்

விவரங்கட்கு :— கே. கோவிந்தசாமி,

செயலாளர், ஏற்பாட்டுக் குழு, செ. மா. தி. மு. க. முதல் மாநாடு

2/45, முத்துமாரிச் செட்டித் தெரு, சென்னை-1

இந்தியாவின் முதல் தலைவர் ராஜேந்திரபிரசாத்?

கவர்னர்—ஜெனரல் ஆச்சாரியார் ஜன. 27-ல் சென்னை திரும்புவார்!

இந்திய கவர்னர்-ஜெனரல் தோழர் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஜனவரி 26-ந்தேதியன்றைய காலைசர்க்கார் மாளிகையின் தர்பார்மண்டபத்தில், இந்தியா குடியரசாகும் பிரகடனத்தைப் படிப்பார். பிரகடனத்தையொட்டி தனது இருக்கையைக் காலி செய்து, தேர்ந்தெடுக்கப்படும் தலைவரை அழைத்து அதில் அமர்த்துவார்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் ஜன. 27-அன்று காலை சென்னைக்குத் திரும்பிவிட திட்டமிட்டுள்ளாராம். அரசாங்கப் பிரிவினையன்று வாழ்த்து மரியாதையுடன் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அனுப்பப்படுவார்.

தலைவரைத் தேர்ந்தெடுக்க அரசியலமைப்புசபை ஜன 24-ந் தேதியன்று கூடுகிறது. இப்பெரும் பதவிக்கு டாக்டர் ராஜேந்திர பிரசாதே ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்படுவாரெனத் தெரிகிறது.

அறிவிப்பு

'மாலைமணி'யில் வெளியிடுவதற்கென அனுப்பப்பெறும் பொதுக்கூட்டம், மாநாடு பற்றிய அறிக்கைகள் விளம்பரமாகவே கருதப்படுமென்பதையும், அவற்றுக்குரிய கட்டணம் செலுத்தியாக வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். 'விளம்பர'மாகக் கொடுக்கப்படாத அறிக்கைகள் 'இனி நடப்பவை'யிலேயே இடம் பெறும்.

நிர்வாகி 'மாலைமணி,

மேற்கு ஜெர்மனி அரசியலில் கம்யூனிஸ்டு தலையீடு

டஸல்டார்ப், ஜன. 8— மேற்கு ஜெர்மனியிலுள்ள அரசியல் கட்சிகளில் கம்யூனிஸ்ட் ஏஜெண்டுகள் முக்கியஸ்தானத்தை பிடித்து வருகின்றனர், என்று சோஷலிஸ்டு தலைவர் ஷூமாசர் கூறுகிறார்.

காமன்வெல்த் மாநாட்டில் இந்தியாவின் பங்கே பெரும் பங்காம்!

———(0)———

நோயல்பேக்கர் காக்கைப் பிடிக்கிறார்

'காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா மிகப்பெரும் பங்கெடுத்துக் கொள்ளப் போகிறது என்று எனக்கு தெரியும். அதனால்தான் மாநாடு நடத்த இலங்கையைத் தேர்ந்தெடுத்தோம்."

என்று பிரிட்டிஷ் காமன்வெல்த் மாநாட்டுக்குச்செல்லும் வழியில், காமன்வெல்த் உறவு அமைச்சர் தோழர் பிலிப் நோயல் பேக்கர் கூறியிருக்கிறார்.

தோழர் நோயல் பேக்கர் கூறிய போக்கிலே, இந்தியா காமன் வெல்த் மாநாட்டின் முக்கிய பங்கு வகிக்கப்போகிறது. என்ற அரிய உண்மையை வெளியிட்டிருப்பது கவனிக்க வேண்டியது.

இப்போதுள்ள நிலைமையில் ஆசிய நாடுகளில் இந்தியா ஒன்றுதான், சீனாவுக்கு அடுத்த பதவியை வகிக்கும் ஆற்றல் பெற்று விளங்குகிறது. எனவேதான், தோழர் நோயல் பேக்கர் காமன்வெல்த் உறவு என்ற பெயரில் இந்தியாவைக் கைப்பிடிக்க முனைந்துள்ளார். போதும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்று அவருக்குத் தெரியுமாம்! அந்த அளவுக்கு இந்தியாவிடம் நம்பிக்கை வைத்திருக்கிறது பிரிட்டன் இந்தியாவின் உதவியைக்கொண்டு ஆசிய நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தப்பார்க்கிறது அமெரிக்க-பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம். காமன்வெல்த் மாநாட்டில் ஆசியாவின் பிரச்னைகள் விசேஷமாகக் கவனிக்கப்படுமென்று தோழர் நோயல் பேக்கர் குறிப்பிட்டிருப்பதன் நோக்கமும் இதுதான் சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாடு என்பது இந்திய பிரதமர் தோழர் நேருவும் பிரிட்டிஷ்

தன் அரசியலைத் தானே திருத்த கனடாவுக்கு உரிமை

ஆட்டவா, ஜன. 8— கனடாவுக்குத் தன் அரசியலை தானே திருத்திக் கொள்ள உரிமையை பிரிட்டிஷ் சர்க்கார் அளித்து விட்டதையொட்டி இவ்விஷயமாக கலந்து ஆலோசித்து நடைமுறைகளை நிர்ணயிக்க கனடாவிலுள்ள 10 மாகாணங்களின் பிரதமர்கள் மாநாடு நாளை இங்கு நடைபெறவிருக்கிறது. இம்மாநாட்டில் செய்யப்படும் முடிவுகள் கனடா அரசியலில் அமல்களாக இருக்கும்.

பிறக்கப்போகும் குழந்தை ஆணா பெண்ணா?

வீஸ்பாடன் ஜன 7— பிறக்கப்போகும் குழந்தை ஆணா பெண்ணா என்பதை மிகவும் சரியாக கண்டுபிடித்துச் சொல்ல ஒரு நூதன முறையை ஜெர்மன் டாக்டர் விக்ஹோல்ட் விட்லெல் கண்டுபிடித்திருக்கிறார்.

பிரசவ காலத்திற்கு ஒரு மாதம் முன்பு கர்ப்பிணிகளின் கண்களை இவர் பரிட்சை செய்கிறாராம். அதிலிருந்து பிறக்கப்போவது ஆணா பெண்ணா என்பதைக் கண்டுபிடித்து விடுகிறாராம்.

இவர் இதுவரை 35 அமெரிக்கப் பெண்களின் கண்களைப் பரிசோதித்து சரியாக கூறியிருக்கிறார். —ஞேசம்

ஏகாதிபத்தியமும் கூடி கிழக்கில் கம்யூனிசத்துக்கு எதிராக ஒரு முன்னணி அமைக்கத் திட்டம் தீட்டும் ஒரு மாநாடு என்று சொல்ல இடமிருக்கிறது தோழர்கள் நேரு, பெவின் ஆகிய இருவர் ஒரு அங்கமாக அமைந்திருக்கும் இதனை ஒருவாறு யூகித்தறியலாம்.

கழக உறுப்பினர் சேர்க்கும் வாரம்

14—1—50ம் நாளிலிருந்து 20—1—50ம் நாள் முடிய உள்ள "பொங்கல் வாரத்தை" முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சேர்க்கும் வாரமாகக் கொண்டு, நாடெங்கும் கழக உறுப்பினர்களைச் சேர்க்கும்படி, ஆர்வமுள்ள இளைக் கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

31—3—50 க்குள் உறுப்பினர்கள் சேர்த்தல் முடிந்துவிடவேண்டுமாதலால், உடனடியாக அச்செயலை நிறைவேற்றித்தரத் தோழர்கள் முந்துற வேண்டும்.

உறுப்பினர்கள் சேர்க்கும் இரசீது புத்தகங்களை அந்தந்த மாவட்ட அமைப்பாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் மாவட்டக் கழகம் அமைந்துள்ள மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் மாவட்டக் கழகச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

என். வி. நடராசன்,

செயலாளர் — அமைப்புக் குழு

இனி நடப்பவை

திருவள்ளூர்— பொங்கல் விழாவை முன்னிட்டு இவ்வூர் சிராவணியர் சத்திரத்தில் 11—1—50 புதன் மாலை 5 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது, தாழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில் தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர் சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

பொத்தனூர் (சேலம்)— ஞானியார் தமிழ்ச்சங்கக் கட்டிடத்தில் 10-1-50 செவ்வாய்க்கிழமை காலை 9-மணிக்கு பொத்தனூர் திராவிட முன்னேற்றக் கழகக் கிளைப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றுவார். தோழர் அசித்தையன் கழகக்கொடியையேற்றுவிப்பார். தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமை தாங்குவார்.

ஜமீன் கிராமங்களில் 'கிஸ்தீ' குறைப்பு

சென்னை, ஜன. 6— ஜனவரி 26-ந் தேதியன்று புதிய ஆக்கிரமிப்பாணையும் ஏற்படும் சமயத்தில் மாகாணத்திலுள்ள சுமார் 16,000 ஜமீன் கிராமங்களுக்கு கிஸ்தி குறைப்பை அறிவிக்கவிருக்கிறார்கள் ஏற்பாடு செய்துள்ளதாயும். பிற 5 000 கிராமங்கள்தான் மிஞ்சு என்று 'கிஸ்தி' குறைப்பு ஸ்பெஷல் ஆபிசர். தோழர் என் கே. செட்டூர் இன்று கூறினார். ஜனவரி 26-ஆம் தேதிக்கு பிறகு இரு மாகாணங்களில் கிஸ்தி குறைப்பு [illegible] 31-ஆம் தேதிக்குள் [illegible] அமலுக்கு வரும் என்று [illegible] ஜனவரியிலிருந்து மார்ச்சு 31-ஆம் தேதி வரையில் [illegible] என்றும் அவர் மேலும் கூறினார்.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது சாம்பிள் புட்டி 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G. பழனியப்பமுதலியார், மதுரை.

வானொலி

10-1-50 செவ்வாய்க்கிழமை

சென்னை

[211·8 மீட்டர்கள்]

காலை :

- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 எ. மாணிக்கம்—பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
- 8 50 வீணை (அ. இ. ரே. வி.)

பிற்பகல் :

- 12-30 சுதந்தரப் பள்ளிகளுக்கு
- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
- 2-00 தமிழில் செய்திகள்
- 2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு
- 2 45 நாள்வகை (இசைத்தட்டு)

மாலை :

- 4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
- 5-30 ஜி. சீனிவாசன், எஸ். சோமளவல்லி (இரு வயலின்கள்)
- 6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 6 20 எஸ். ஏ. குப்புசாமி-பாட்டு

இரவு :

- 7-00 வி. ராமமூர்த்தி—பேச்சு
- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 நால்வகை (இசைத்தட்டு)
- 7 45 திருச்சியில் உள்ளபடி
- 9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 9-15 நாவின் கவலை—நாடகம்
- 9 30 பி. சக்ரபாணி—பாட்டு
- 10 00 வாத்ய இசை இசைத்தட்டு
- 10-30 முடிவு

* * *

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை :

- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 பி. ஆர். சோமசுந்தரம்—பல்லாங்குழல்
- 8 00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8 15 கே. நடராசன்—பாட்டு
- 8-50 என். கே. வசந்தகோகிலம் (இசைத்தட்டு)

பிற்பகல் :

- 12 30 சுதந்தரப் பள்ளிகளுக்கு
- 1 00 சங்கீதம் (இசைத்தட்டு)
- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1-40 கே. நடராசன்—பாட்டு
- 2 00 தமிழில் செய்திகள்
- 2-10 சோமளவல்லி, சீனிவாசன்—வயலின் (இசைத்தட்டு)
- 2 15 உயர்தர பள்ளிகளுக்கு

மாலை :

- 4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
- 5-00 பி. ஆர். சோமசுந்தரம்—[illegible]
- 5-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 6-15 சித்ரகானம் (இசைத்தட்டு)
- 6 30 [illegible]

இரவு :

- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 என். துரைசாமி—பேச்சு
- 9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 9-15 [illegible] (அ. இ. ரே. வி.)
- 9 35 நீங்கள் கேட்டவை (இ. த.)
- 1[illegible] முடிவு

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 2/45 Muthumari Chetty Street Madras-1.